**செய்தி வெளியீடு எண்:132** **நாள்:17.02.2021**

**செய்தி வெளியீடு**

சென்னையில் உள்ள பசுமைவழிச் சாலையில் இயங்கி வரும் அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், தமிழக இளைஞர்களுக்குக் குறிப்பாகக் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள ஏழை மாணவர்களுக்கு ஆண்டுதோறும் குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றி பெற்று இந்திய நிர்வாகத்தில் உயர்நிலையினை அடையும் வகையில், பயிற்சியளிக்கப்படுகிறது.

மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள அகில இந்தியக் குடிமைப் பணிக்கான முதனிலைத் தேர்வில் கலந்துகொள்ள ஏதுவாக அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இப்பயிற்சியில் சேர்வதற்கான நுழைவுத்தேர்வு 24.01.2021 அன்று 16 மையங்களில் உரிய பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி நடத்தப்பட்டன. இந்த நுழைவுத் தேர்வில் 3956 நபர்கள் கலந்துகொண்டனர். இந்த தேர்வு முடிவு (Result) 12.02.2021 அன்று வெளியிடப்பட்டது.

இப்பயிற்சி மையத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளவர்களின் தேர்வுப் பட்டியல் (Selection List) மற்றும் சேர்க்கை அட்டைகள் (Admission Cards) 17.2.2021 அன்று இப்பயிற்சி மையத்தின் www.civilservicecoaching.com என்ற இணைய தளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். சேர்க்கைக்கு வருகைபுரியும் ஆர்வலர்கள் 20.02.2021 அல்லது அதற்குப் பின்னர் கோவிட் 19 பரிசோதனை செய்து கோவிட் இல்லை என்ற சான்றினை கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும்.

**சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் சேர்க்கைகான அட்டவணை பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| **1.** | பகுதி நேரம் (Part Time) அனைத்துப்பிரிவினர் | **22.2.2021.**<br>திங்கள் |
| **2.** | முழு நேரம் (Full time) Non-Residential<br>**(CMDA-சென்னை மாநகராட்சிக்கு உட்பட்டது)** | **23.2.2021.**<br>செவ்வாய் |
| **3.** | முழு நேரம் (Full time) BC/BC(M)/MBC/DNC | **24.2.2021.**<br>புதன் |
| **4.** | முழு நேரம் (Full time) SC/ST/SC(A)/DA/<br>General Category | **25.02.2021**<br>வியாழன் |

வெ.இறையன்பு
கூடுதல் தலைமை செயலர்/ இயக்குநர்
பயிற்சித்துறை தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**